# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல்: 19 யாழ்ப்பாணம் ஜூன் 1998



## தெற்கு ஆசிய அணு பரிசோதனைகளும் பத்திமாவும்

ஆசிரியருரை :-

ஒரு மாதத்திலேயே ஒரு பிராந்தியத்தில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படலாம். ஒரு மாத காலத்துள்ளேயே எமது இரு அண்டை நாடுகளில் பத்து அணுக்குண்டுகள் பரீட்சிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் ஒரு குண்டு, கிரோசிமாவில் 1945 இல் போடப்பட்ட குண்டுக்குச் சமன்.

அத்துடன் ஆப்கானிஸ்தானில் பயங்கர பூமி நடுக்கம் ஐயாயிரம் மக்களைப் பலியெடுத்தது. நிலம் பிளந்து அறுபது கிராமங்களும் அவற்றின் கட்டிடங்கள், வீடுகளும் பூமியுடன் சங்கமமாகி விட்டன.

"இதோ ஆண்டவர் எல்லோருக்கும் தீர்ப்பளிக்கத் தம் பல்லாயிரக்கணக்கான தூயவர்களோடு வந்து விட்டார். இறைபற்றில்லாதவர்கள் செய்த அனைத்துத் தீய செயல்கட்காகவும், இறை பற்றில்லாத பாவிகள் பேசிய அனைத்து கடுஞ்சொற்களுக்காகவும் தண்டனை வழங்குவார் என முன்னுரைத்துள்ளார். இவர்கள் எப்போதும் முணுமுணுப்பவர்கள்; குறை கூறுபவர்கள்; தங்கள் தீய நாட்டங்களின்படி வாழ்பவர்கள்; வரம்பு மீறிப் பெருமை பேசுபவர்கள்; தங்கள் நலனுக்காகப் பிறரைப் போலியாகப் புகழ்பவர்கள்" யூதா 15;16

பத்திமாவின் இரண்டாம் இரகசியத்தில் (13 07 1917) முதலாம் உலக யுத்தம் முடிந்தபின், மக்கள் மனம் மாறாவிடின் அதைவிடப் பெரிய, பயங்கரப் போர் மூளும் எனத் தேவதாய் தெளிவாகக் கூறியிருந்தார்.

இரண்டாம் உலக யுத்தம் இரண்டு அணுக்குண்டுகளோடு நின்று விட்டது. அதைத் தொடங்கி நடத்தியவன் ஜெர்மனியின் சர்வாதிகாரி கிட்லர். அவனுக்குத் துணைநின்றவர்கள் இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினியும் யப்பானிய மன்னர் கிரோகிற்றோவும்.

"அன்பார்ந்தவர்களே, நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் திருத்தூதர்கள் முன்னுரைத்த வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள், ஏனெனில் இறைபற்றில்லாமல் தங்கள் தீய நாட்டங்களின்படி வாழ்ந்து ஏளனம் செய்வோர் இறுதிக் காலத்தில் தோன்றுவர் என்று அவர்கள் உங்களுக்குச் சொன்னார்கள். இவர்கள் பிரிவினை உண்டு பண்ணுபவர்கள்; மனித இயல்பின்படி நடப்பவர்கள்; கடவுளின் ஆவியைக் கொண்டிராதவர்கள்" (யூதா 17-19)

அன்று மூவர் இவ்விதம் உலகில் பயங்கரங்களைப் பரப்பி வேடிக்கை பார்த்தனர். இன்று இவர்களின் வாரிசுகள் உலகின் பல பாகங்களிலும் இடிஅமீனாக, பொல்பொட்டாக தோன்றிக்கொண்டேயிருக்கிறார்கள். இதுபற்றியதே பத்திமாவின் இரண்டாவது இரகசியம்.

எமது குரலின் முதலாம் இதழில் (டிசம்பர் 96) பத்திமாவின் இரண்டாம் இரகசியத்தையும் அவற்றில் இதுவரை நடந்தேறியவை பற்றியும் விபரமாகக் குறிப்பிட்டிருந்தோம். அவற்றுள் போர் பற்றிய பகுதியை இங்கு மீண்டும் தருகிறோம்.

★ யுத்தம் விரைவில் முடிவுக்கு வரும், காட்சி நடைபெற்றது 1917 இல், இரு வருடங்களின் பின் முதலாம் உலக மகா யுத்தம் முடிவெய்தியது (900 000 மக்கள் மடிந்தனர்.)

★ தங்கள் துரோகங்களால் ஆண்டவரின் உள்ளத்தை நோகச் செய்வதை மக்கள் நிறுத்தாவிடில் இனிமேல் வரவிருக்கும் பாப்பரசர் காலத்தில் மற்றொரு கொடிய யுத்தம் நடைபெறும்.

11ம் பத்திநாதர் பாப்பரசர் காலத்தில் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியது. (1939 – 1945) 54000 000 மக்கள் மடிந்தனர்.

★ பாவாக்கிரமங்கள் அதிகரிப்பின் யுத்தங்களாலும், பஞ்சம், கொள்ளை நோய் முதலிய வேறு காரணங்களாலும் உலகு சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும்.

இரண்டாம் உலகமகா யுத்தம் முடிந்து ஐம்பது வருடங்கட்கு மேலாகியும் இருபதுக்கு மதிகமான சிறிய வறிய நாடுகளில் பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலியெடுத்த வண்ணம் போர் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

அன்னையின் அறிவுறுத்தல்கள், அகில உலக அனர்த்தங்களும், பாவ மிகுதிக்கான தண்டனைகளே என்பதை எமக்கு அறிவிக்கின்றன.

"போர் முழக்கங்களையும் போர்களைப் பற்றிய செய்திகளையும் கேட்கப் போகிறீர்கள், ஆனால் திடுக்கிடாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். இவை நிகழத்தான் வேண்டும் ஆனால் இவையே முடிவாகா. நாட்டை எதிர்த்து நாடும், அரசை எதிர்த்து அரசும் எழும், பல இடங்களிலும் பஞ்சமும் நில நடுக்கங்களும் ஏற்படும்."

(மத் 24:6,7)

"கவனமாயிருங்கள், விழிப்பாயிருங்கள். ஏனெனில் அந்நேரம் எப்போது வருமென உங்களுக்குத் தெரியாது"

(மாற் 14 : 33)

# சண்டையும் சமாதானமும்

பதினாறு வருடங்களாக நடந்து கொண்டிருக்கும் சிறியதோர் தீவின் பெரியதோர் போரின் பலாபலன்களின் பங்காளிகள் நாம். போர் இப்பகுதிகளில் முடிந்து விட்டது போன்ற ஓர் மாய்கைக்குள். போரின் இறுதியில் வரப் போகும் பின் சுவையினை அனுபவிப்பவர் நாம்.

வியட்நாமின் இருபத்தைந்து வருடப் போராட்டப் பின்னணியில், வியட்நாம் மக்கள் பஞ்சத்தால் படும் பரிதாபப் பாட்டை, ஆப்கானிஸ்தானில் அந்நியர் படை வெளியேறியபின் நடைபெறும் உள்நாட்டு மோதல்களை, பூமி நடுக்கம், அனல் தாக்கம், அடிப்படை வாதங்களால் உலகு உருக்குலைவதை நாம் பார்க்கிறோம்.

போர்ச் செயல்களின் முடிவோடு மட்டும் சமாதானம் வந்து விடாது. அது பாவ விமோசன பரிகாரத்திலும், பரித்தியாக செப வாழ்விலும், பகைமை தவிர்ந்த இதய ஒப்புரவாக்குதலிலும், ஏழ்மை நிறை வாழ்விலுமே (இன்பநுகர் வாழ்வுப் போட்டியில் அல்ல) தங்கியிருக்கிறது என்பதை தேவதாயின் திர்க்க தரிசனக் காட்சிகளிலும், லூர்து பத்திமா தொட்டு மஜுகோர்ஜி வரை உலக நிபுணர்களின் கண்டு பிடிப்புகளிலும், உத்தரவாதம் பெறுகிறது.

நம் தீவின் போரும் சமாதானமும் என்று பேசப் போனால் உடனடியாக ஆயுதப் போர் நிறுத்தப்பட்டு நீதி அன்புத் தளத்தில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் ... ஆனால் நடப்பது என்ன? .....

உலகின் பெரும் பணக்கார நாடுகள், பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்து வறிய நாடுகளுக்கு விற்பனை செய்கின்றன. அவையும் தம் வருவாய்க்கு மேலாக வெளிநாடுகளிடம் கடன்பட்டு பெறுமதி மிக்க ஆயுதங்களை வாங்கிக் குவிக்கின்றன. ஆயுதங்கள் கையிருப்பில் இருக்கு மட்டும் யுத்தம் தொடரத்தான் வேண்டும்.

மறுபக்கத்தில், தெற்கில் சமாதானம் செய்யும் குழுக்கள், இவை பெரும் பண உதவியை வெளிநாடுகளிடமிருந்து பெறுகின்றன. சமாதானக் கருத்தரங்குகள், ஊர்வலங்கள், தெருக்கூத்துகள், மேடைப் பேச்சுகள், பாதயாத்திரைகள் பெருஞ் செலவுகளில் நடத்தப்படுகின்றன. இருந்தும் இச் சமாதானக் குழுக்கள் போருக்கு உடன் பொறுப்பாயிருப்பவர்களை எதிர்ப்பதில்லை. உதவும் சிறு சக்திகளையே குறை கூறுவர். உண்மையில் போர் நிறுத்தப்படின் இவர்களது உழைப்பும் நின்று விடும்

இதனால்தான் வேதம், குதிரைகளிலும் தேர்களிலும் நம்பிக்கை வைக்க வேண்டாம் என்கிறது.

(திருப்பா 20;7)

எனவேதான் சமாதானத்திற்கு ஆயுதம் குவிப்போரையும், சமாதானத்துக்கு வெறும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவோரையும் விட, தேவதாயின் சமாதானத் திட்டம் யதார்த்த உண்மையுள்ளது.

இரண்டாம் உலகப் போரில் நேசநாடுகளின் படையணிகளின் பிரதம தளபதியாக யப்பானை வெற்றி கண்டவர் ஜெனரல் மாக் ஆர்தர். ஹிரோஷிமா, நாகசாக்கி நகர்கள் மீது அணுகுண்டுப் போர் நடத்த உத்தரவு பிறப்பித்தவரும் இவரே. படையிலிருந்து விலகி ஓய்வு பெற்றபின் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்ட சில வரிகள் கீழே தரப்படுகின்றன. ஓர் சிறந்த இராணுவ வீரனின் சமாதான தாகம் இது:-

"நான் இறந்த பின் எனது புதல்வன் யுத்த களத்திலிருந்து என்னை நினையாமல், தனது இல்லத்திலிருந்து என்னை நினைத்து, நானும் அவனுடன் மனதார ஒருமித்து, "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்று செபிக்கக் கூடிய சமாதான நிலையிலேயே நம்பிக்கை கொண்டுள்ளேன்,

# பத்திமாவின் 2ம் காட்சி

"இன்று (13 6, 1917) எங்களை இங்கு வரும்படி கூறினீர்கள். நாம் என்ன செய்ய வேண்டும்? என லூசியா காட்சி நாயகியிடம் கேட்டாள். அடுத்த மாதமும் இதே திகதியில் இங்கு வருமாறு அச்சிறுவர்களிடம் அந்த அழகிய மாது கூறினாள். ஒவ்வொரு நாளும் செபமாலை செபிக்குமாறும் ஒவ்வொரு காரணிக்கத்துக்கு முன்னும் "ஓ என் யேசுவே, எங்கள் பாவங்களை மன்னியும் நரக நெருப்பிலிருந்து எங்களை மீட்டருளும், சகல ஆன்மாக்களையும் பரலோக பாதையில் வழி நடத்தியருளும் உமது உதவி அதிகம் தேவையானோருக்கு உதவியருளும்" என்று செபிக்குமாறு கற்றுக் கொடுத்தாள்.

"எங்களைக் கெதியில் உங்களுடன் மோட்சத்துக்கு கொண்டு போங்கள். இங்கே மனிதரின் தொல்லையையும் அவமதிப்பையும் தாங்க முடியவில்லை" என லூசியா உருக்கமாக வேண்டினாள். "நான் விரைவில் வந்து பிரான்சிசையும்" பின் ஜசிந்தாவையும் கூட்டிச் செல்வேன், ஆயின் நீ இந்த உலகில் அதிக காலம் வாழ வேண்டும். எனது மாசற்ற இருதயப் பக்தியை உலகில் பரப்ப வேண்டும் என நமதாண்டவர் விரும்புகிறார் அதற்காக லூசியா எழுத, வாசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்" என காட்சிநாயகி பதிலளித்தாள்.

"அப்படியானால் நான் தனியாகவா இருக்க வேண்டும்" என லூசியா ஏக்கத்துடன் வினாவினாள். தனது சிறுமைத் துணர் இருவரும் தன்னை விட்டு விரைவில் பிரிந்து விடுவது அவளுக்குக் கவலையை அளித்தது.

"இல்லை மகளே எனது மாசற்ற இருதயம் உனது சகல துன்பங்களிலும் உன்னோடிருந்து ஆறுதலளித்து வழி நடத்தும்" என உறுதியளித்தாள் காட்சிநாயகி.

இதன்பின் மூன்று சிறுவர்களும் ஒரு ஒளிக்கதிர் மூலம் தேவதாயின் மாசற்ற இருதயத்தைக் கண்டார்கள். அதைச் சுற்றிலும் கூரிய முட்கள் காணப்பட்டன. மனிதர்களின் பாவங்களை அந்த முட்கள் சுட்டிக் காட்டின.

"செபியுங்கள், அதிகமாகச் செபியுங்கள், பாவிகட்காக பரித்தியாகங்களைச் செய்யுங்கள். ஏராளமான ஆன்மாக்கள், அவர்கட்காக செபங்களையோ, பரித்தியாகங்களையோ ஒப்புக்கொடுக்க எவருமில்லாததால் நரகத்துக்குப் போகிறார்கள்" எனக் கூறிய காட்சி நாயகி அடுத்த காட்சியில் ஒரு இரகசியத்தை தெரிவிப்பதாக வாக்களித்து வான வீதியில் சென்று மறைந்தாள்.

குறிப்பு :-

பண்டைத்தரிப்பு பத்திமா திருத்தலத்தில் பிரதான பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள மரியாயின் மாசற்ற இருதய நாயகியின் சொரூபம் இரண்டாவது காட்சியில் காணப்பட்ட மாதாவின் மாதிரியாக லூசியாவின் மேற்பார்வையில் வடிவமைக்கப்பட்டதென்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# தேவதாயின் அற்புத வரலாறு (தொடர்ச்சி)

பாலகர்கள் கொல்லப்படும் வரலாறு:-

திருக்குடும்பம் எகிப்துக்கு வந்து ஆறு மாதமானபின் ஏரோது பெத்தலேம் ஊரிலே மூன்று அரசர்களுக்கும் ஜெருசலேம் ஊரில் திவ்விய பாலகனுக்கும் நிகழ்ந்த அற்புதமான காரியங்களைக் கேள்விப்பட்டு தன் இராச்சியத்தை அழிக்க வேறோர் அரசன் தோன்றியிருக்கின்றான் என்று அறிந்து பாலகர்களைக் கொல்லும்படி கட்டளையிட்டான். திவ்விய பாலகன் அப்பாலகர்களின் திருப்பலியை அவர்கள் தந்தை, தாய்மாருக்காகவும் மனுக்குல இரட்சணியத்தின் ஆரம்பமாகவும் ஏற்றுக் கொள்ள பரமபிதாவை வேண்டிக் கொண்டார். உலக இரட்சகர், மாசற்ற பாலகர் தமது பெயராலே பலியாகவும் வேதசாட்சிகளின் முடியை அவர்கள் பெற்றுக்கொள்ளவும் வேண்டிய பகுத்தறிவைத் தரும்படி ஆதிபிதாவை வேண்டிக்கொள்வதைத் தேவமாதா கண்டு இம் மன்றாட்டுக்களையெல்லாம் பரமபிதா மாமிசமான வார்த்தையின் விருப்பப்படி நடத்தினாரென்று அறிந்தாள்.

இத்தருணத்தில் எலிசபெத்தம்மாளுக்கும் ஸ்நாபக அருளப்பருக்கும் என்ன நடந்தது என்று பக்தி வணக்கத்துடன் திவ்விய பாலகனை வினவினாள். திவ்விய பாலகன், சக்கரியாஸ் நாலு மாதங்களுக்கு முன் இறந்து போனாரென்றும் விதவையாகிய எலிசபெத்தம்மாள் ஏரோதனுடைய கொலைக்குத் தப்ப தன் மகனோடு வனாந்தரம் சென்று தபசு பண்ணுகிறாளென்றும் இன்னும் மூன்று வருடத்தில் அவள் இறப்பாளென்றும் ஸ்நாபக அருளப்பர் அவ்விடத்திலேயே செபதபம் செய்வாரென்றும் சொன்னார். தேவமாதா இது கேட்டு தமது சம்மனசுகளை மைத்துனியினிடத்தில் அனுப்பி அவளுக்கு ஆறுதல் சொல்லுவித்ததுமன்றி போசனமும் அனுப்பிக் கொண்டிருந்தாள். அவள் மரணத்தருவாயில் தமது சம்மனசுக்களில் அனேகம் பேரை அவளிடத்திற்கு அனுப்பி அவள் மரித்தபின் சம்மனசுக்களைக் கொண்டு வனாந்தரத்திலே அவளை அடக்கம் பண்ணச் செய்தாள் பின் ஏழு வருடகாலம் அருளப்பருக்கு உணவு அனுப்பிக் கொண்டிருந்து, ஏழு வருடங்கள் கடந்தபின் உணவு எதுவும் அவருக்கு அனுப்பவில்லை. அவரோ கீரைகளையும் காட்டுத்தேனையும் வெட்டுக்கிளிகளையும் சாப்பிட்டுக் கொண்டு வந்தார்.

தேவமாதா, சிறுபிள்ளைகள் வெட்டப்படுவது தமது சமூகத்தில் நடக்கப் போவதை தூரநோக்கோடு அறிந்ததோடு அவர்கள் எத்தனை பேரென்றும் அறிந்திருந்தாள். அவர்களில் சிலர் எட்டு நாட்களும் சிலர் இரண்டு மாதமும் சிலர் ஆறு மாதங்களும் உள்ள குழந்தைகளாய் இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருந்தனர். குழந்தைகள் அறிவின் வரத்தால் தெய்வத்தை அறிந்து அவருக்கு வணக்கம் செலுத்தி பெரும் அன்போடு அவரை நேசித்து விசுவாசம், நம்பிக்கை முதலிய தேவப்பிரசரணம் செய்தார்கள். மரித்தபின் அவர்களை அனேக சம்மனசுக்கள் பிதாப்பிதாக்கள் இடம் கூட்டிக் கொண்டு போனார்கள். இதை அறிந்த தேவமாதா அன்பின் பெருக்கினால் பிள்ளைகளே; ஆண்டவரைப் புகழுங்கள் என்னும் சங்கீதத்தைப் பாடத் தொடங்கினதால் சம்மனசுக்களும் அவளுடன் பாடினார்கள். தேவமாதா தேவன் மாமிச ஐக்கியமானதைக் குறித்துப் பேசும்போது திருப்பாலகன் அர்ச். சூசையப்பருக்கு ஓர் ஆறுதல் தர விரும்பி தந்தையே! என்றார் இதைக் கேட்ட சூசையப்பர் மிகவும் சந்தோஷமடைந்து ஆனந்தக் கடலில் அமிழ்ந்திப்போனார். இது அவர்கள் எகிப்திலிருந்து வந்து ஒரு வருடமானபின் நிகழ்ந்தது.

தேவமாதா திருக்குழந்தையைப் பார்த்து உம்மை மூடிவைத்த வஸ்திரத்தை எடுத்துவிடலாமா? என்று மிகவும் பணிவோடு கேட்டாள். அப்போது அவர் மறுமொழியாக என்னுடைய இளம் பிராத்தியத்தின் கட்டுக்கள் நாம் உண்டு பண்ணி இரட்சிக்க வந்த மனிதர்கள் பேரில் நமக்கிருந்த அன்பின் காரணமாக இன்பமாகத்தான் இருந்தன. நமக்குச் சரியான வயது வரும்போது நமது சத்துருக்கள் நம்மைப் பிடித்துக் கட்டிக் கொல்லுவார்கள். இது பரம பிதாவுக்கு விருப்பம் என்றால் எமக்கும் விருப்பம்தான். உலகத்திலே ஒரே அங்கியாஸ்தான் நமது சரீரம் மூடப்பட வேண்டியது. படைக்கப்பட்டதெல்லாம் நமதானாலும் மனிதர்களுக்கு நல்லமாதிரிகை கொடுக்க அவசரம் இல்லாததை விட்டுவிடுவோம். நமக்குவிருப்பமான மங்கல் நிறமான ஓர் நீண்ட அங்கியை மாத்திரம் நமக்கும் போடும்; அது நம்மோடு வளரும். நமது மரணத்தருவாயில் அதைச் சீட்டுப்போட்டுப் பங்கிட்டுக் கொள்வார்கள். நாம் ஏழ்மையாய் பிறந்து ஏழ்மையாகவே மரித்தோமென்று சனங்கள் அறிய அது முதலாய் நமக்கு விடப்படுவதில்லை என்றார்.

இதை அறிந்த தேவமாதா சொன்னதாவது. ' நீர் சிறிய வயதாய் இருப்பதால் திருப்பாதங்கள் கற்களினால் தாக்கப்படாதபடி ஓர் எளிமையான பாதரட்சையும் சிறு அவயவங்களுக்குக் காவலாக மயிர்ச்சட்டைக்குள் ஓர் சிறுவஸ்திரமும் அணிந்து கொள்ளும் என்று வேண்டிக்கொண்டாள். அதற்கு ஆண்டவர் சொன்னது. என் தாயாரே! கால்களுக்கு ஓர் எளிமையான பாதரட்சை மாத்திரம் கொடும், அவைகளை நாம் பிரசங்கம் செய்யும் காலம்வரை போட்டிருந்து பின்பு அதை எடுத்துவிட்டு வெறும் காலால் நடப்போம், வஸ்திரமோ நாம் மனிதர்களுக்கு நன்னெறி உணர்த்த வேண்டியதால் உட்சட்டை வேண்டாமென்றார்.

தேவமாதா உடனே தம்முடைய கைகளினாலே பாதரட்சையும் தையலில்லாத சிறு அங்கியையும் செய்தாள். அவ் அங்கி ஆண்டவரோடு வளர்ந்ததுமன்றி அவர் அதைப் போட்டிருந்த முப்பத்திரண்டு வருட காலமும் அதன் நிறம் மங்கியதில்லை. ஆண்டவர் அந்த வயதில் யாதொரு உதவியுமின்றி நடந்ததைக் கண்ட தேவமாதாவும் சூசையப்பரும் சந்தோஷப்பட்டார்கள். தேவமாதா பரமபிதாவை நோக்கித் தாம் திவ்விய பாலகனுடன் கூட இருக்கவேண்டுமா அல்லது அவரைத் தனியாய் விட வேண்டியதாவென்று தியானித்தாள். பரமபிதா, நீ கூட இருக்கவேணுமென்று சொல்ல இவர்களுக்குள்ளே பரம இரகசியம் நடந்தது. திவ்வியபாலகன் ஜெபம் செய்யும்போது வெகுவாய் அழுது இரத்த வேர்வையினாலே தோய்வார். இதைக்கண்ட தேவமாதா பாவத்தில் சிக்கி நரகத்திற்குள்ளாகிறவர்களுக்காக இப்படி அழுகிறாரென்று வியாகுலத்தால் விம்மி வேர்வை இரத்தங்களைத் துடைப்பாள். திவ்விய பாலகனுக்கு ஆறு வயதானபோது நோயாளரைப் போய்ப் பார்த்தும் சிறு பிள்ளைகளுக்கு வேத உபதேசம் சொல்லியும் வருவார். தேவமாதாவுக்கும் அர்ச். சூசையப்பருக்கும் அவர் காட்டிவந்த கொஞ்சுதல்களை நிறுத்திவிட்டார். திவ்விய குழந்தையினுடைய முகத்தில் தெய்வ பிரகாசம் விளங்கியபடியால் அது மிகவும் குறையாமுன்னே இவர்கள் அவருக்கு தடையாக இருக்கவில்லை.

(வளரும்)

---

தேவதாயின் அணி 13 ம் திகதிகளில்
பி. ப. 4 மணிக்கு கூடுகிறது.
''புனிதவளன் ஆச்சிரமம்''
102, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## சலோம் மரியா

கிரேக்க நாட்டிலிருந்து ஒரு குருவானவர் ஒரு கடிதத்தையும் அன்னை மரியாளுக்கு ஒரு செபத்தையும் யாழ் ஆயருக்கு அனுப்பியுள்ளார். ஆயரவர்கள் இவற்றைத் தேவதாயின் குரலில் பிரசுரிக்க உதவியமைக்காக நன்றியுடையோம்.

கடிதத்தின் சுருக்கம்

இச் செபம் செபமாலையை அடிக்கடி செபிக்க வசதியற்றோருக்காக இயற்றப் பட்டது. கத்தோலிக்கர், கிழக்குத்தேய வைதீக சபையினர் பலர் நாளாந்தமே இச் செபத்தை செபித்து வருகின்றனர். ஆங்கிலம், ஜேர்மன், இத்தாலிய மொழிகளிலும் இது மொழிபெயர்க்கப்பட்டு உபயோகிக்கப்படுகிறது இதன் உண்மைக் கருத்து...

''தொடக்கத்தில் வாக்கு இருந்தது அவ்வாக்கு கடவுளோடு இருந்தது அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது'' ''அனைத்தும் அவரால் உண்டாயின, உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை'' யோ. 1:1,3

கத்தோலிக்கம் அமைப்பையும் ஒழுங்கையும் விரும்புகிறது. பதிதம் பிரிவினையையும் ஒழுங்கீனத்தையும் நாடுகிறது.

அவர்கட்கு இரு அருட் சாதனங்கள் தான் உள்ளன (தப்பபிப்பிராயங்களுடன்)

அவர்கட்கு அர்ச்சிக்கப்படும் குருத்துவம் இல்லை திருமணம் கலைக்கப்படலாம். பாவ சங்கீர்த்தனம் இல்லை, நோயில் பூசுதல் இல்லை, நற்கருணையில் யேசுவின் பிரசன்னம் இல்லை, தேவதாயின வணக்கம் இல்லை, அவளது அமல உற்பவம், மத்தியஸ்தம், புதுமைகள் இல்லை. அர்ப்பண வாழ்வு மணமான குருக்கள், பெண்கள் குருத்துவம் தேவை.

கிறிஸ்தவர்களின் ஐக்கியம் அவசியம் என எம் திருச்சபை அறைகூவ, சிலர் அதை விட்டு விலகி, வேறு சபையில் சேர்கின்றனர்.

உலகோடு திருச்சபை சமாதானம் கொண்டாட முடியாது. உலகுக்குத் தேவையானது விவகாரத்து, பணம், மது, போதை, சிசுக் கொலை, சாத்தான் வழிபாடு, காமக் கேளிக்கைகள், ஆடம்பரங்கள் ......

யூதர்கள் திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டை நிராகரி என்கின்றனர்.

உயிர்ப்புநாள் வாழ்த்துக்கள்.

## அருள் நிறை மரியே வாழ்க

யேசுவின் அதிதூய தாயே, தேவதூதன் மங்கள வார்த்தை சொல்லி அப்புனித நாளில் உம்மை வாழ்த்தியது போல அந்த வார்த்தைகளால் நாமும் உம்மை வாழ்த்த வரந்தாரும்

மாசற்ற கன்னிகையே, அன்று உமது எளிமையான இல்லத்தில் எதிரொலித்த, தேவதூதன் கூறிய வாழ்த்தொலியின ஒரு துளியையாவது நாம் உபயோகித்து உம்மை வாழ்த்தும் தகுதியைப் பெற உதவுவீராக.

அன்று எல்லாத் தலைமுறைகளும் உம்மைப் பேறுடையாளெனப் போற்றும் வண்ணம், வாழ்க மரியே என்ற தேவதூதனின் மகிழ்ச்சி மிக்க வார்த்தைகளோடு உலக வரலாற்றில் ஒரு மாறுதல் ஆரம்பித்து, மனுக்குலத்தில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியதே.

அவ் வாழ்த்துடன் மனிதரிடையே, அருளின் விடிவு ஆரம்பித்ததுடன் உமது ஆட்சியும் தொடங்கியதே. ஆகவே புனித கன்னியே, உம்மை நோக்கி எமது அருகதையற்ற உதடுகளால், 'வாழ்க மரியே' என நாளும் பொழுதும் எம் இறுதி மூச்சு வரை உம் திருநாமத்தை வாழ்த்தி உச்சரித்த பின் வான வீட்டிலும் வான தூதரோடும் புனிதர் அனைவரோடும் உம்மை வாழ்த்த வரந்தாரும்.

ஏனெனில் அன்று வானமும் பூமியும் படைத்தாளும் பேரரசரின் தூதர் கபிரியேல் இவ் வாழ்த்தொலியோடுதான் மனிதருள் மாணிக்கமான உமது அனுமதியை வேண்டி நின்றார். வானமும் பூமியும் உம்மிலே இணைய இறை மனிதன் அவதரித்தார்.

எனவேதான் நாம் இடைவிடாது ''அருள்நிறை மரியே வாழ்க, ஆண்டவர் உம்முடனே, பெண்களுள் பேறு பெற்றவள் நீரே. உமது உதரத்தின் கனியான இயேசுவும் இறைவனாமே என்று மன்றாடுகிறோம்

மரியே, அதிபரிசுத்த இறைவனின் அன்னையே, பாவிகளான எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். இப் பூமியில் வாழும் நாட்களில் எம்மைப் பாதுகாத்தருளும். எம் இறுதி நேரத்தில், மரண நிழல் எம்மைச் சூழும் போது, எம்மருகில் நின்று, உமது கனிவான பார்வையால அவ்விருளின் பயங்கரங்களை அகற்றியருளும். சிலுவையடியில் நீர் நின்று உம் திருக்குமாரனின் இறுதி மூச்சை அர்ப்பணித்தது போல எமதருகிலும் அவ்வேளையில் காத்துநிற்பீராக.

வாழ்க மரியே என இறுதியாக உச்சரித்து எமது ஆன்மாவை உமது கரங்களில் கையளிப்போமாக ஆமென்.

---

வியட்நாமின் மைலை, போன்ற புதுக்குடியிருப்பு சுதந்திரபுர கிராம அழிவுகளை தேவதாய் எம் செபத்தால் தடுத்து நிறுத்த வேண்டுமென யூன் 13 - 20 வரை, அங்கு பாதிப்புற்ற மக்களோடு உபவாச செபவரமாக்குவோம்.

# மக்கள் பணியில் இணைந்த இருதுருவங்கள்

டொறத்தி ஒரு குழந்தைக்கு தாயானதும் மகிழ்வு கொண்டு அக் குழந்தைக்கு கத்தோலிக்க முறையில் ஞான முழுக்கு கொடுக்க விரும்பினாள். வாழ்வின் துயர் நிலையில் இயற்கையின் மகிழ்வே என்னை இயற்கையின் சிருஷ்டிகரை நாட வைத்தது என அவளது நினைவுக் குறிப்பு கூறுகிறது. ஆரம்பத்திலிருந்தே மதம் மக்களை மயக்கும் ஒரு கவர்ச்சி என நாத்திகம் பேசிய டொறத்தி இறைவனால் ஈர்க்கப்பட்டது ஒரு பெரும் புதுமையாகும். சிறு வயதிலிருந்தே மக்கள் பணியில் நாட்டங்கொண்ட அவள் மக்களோடு நெருக்கமாக வாழ்ந்தது கத்தோலிக்க சபையே எனத் திடமாக நம்பினாள். இதுவே அவளது கணவருக்கும் அவளுக்குமிடையே பிரச்சனையை உருவாக்கி உறவணைக்கையும் முறிக்குமளவில் சென்றது. டொறத்தி தன் குழந்தைக்கு ஞானமுழுக்கு கொடுத்து சில மாதங்களுள் தானும் கத்தோலிக்கத்துள் இணைந்தாள்.

டொறத்தி ஒரு சிறந்த எழுத்தாளர். பத்திரிகைகட்கு அவள் வரைந்த கட்டுரைகள், கற்பனைக் கதைகள், நாவல்கள் முதலியவற்றால் கணிசமான பணம் வந்து கொண்டிருந்தது. அதைக் கொண்டு நியுயோர்க் கரையிலுள்ள ஸ்ராற்றின் தீவில் ஒரு சிறிய குடிசையை வாங்கினாள். அவள் எழுதிய ஒரு நாடகம் உலகப் புகழ்பெற்ற திரைப்பட நகரமான ஹொலிவூட்டின் தயாரிப்பு நிறுவனமொன்றில் திரைக்கதை உரையாடற் குழுவில் எழுத்து வேலையையும் பெற்றுக் கொடுத்தது

பீற்றர் ஆரம்பத்திலிருந்தே ஒரு துறவற சபையில் இணைந்திருந்தார். துறவறமே தனது அழைத்தல் என திடமாக நம்பினார். பின் துறவற சபையை விட்டு பாரிஸ் நகர் சென்று ஒரு கத்தோலிக்க இயக்கத்துடன் இணைந்து ''ஜனநாயக எழுச்சி'' என்ற கத்தோலிக்க பத்திரிகையிலும் கடமையாற்றினார். 1909 இல் கனடா சென்ற சில பிரான்சியரோடு சேர்ந்து பயணம் செய்தார். தன்னுடன் கூட வந்தவர்கள் இறக்க, அவர் இரகசியமாக அமரிக்கா சென்றார். புனிதர் பிரான்சிஸ் அசிசியுடைய எழ்மை, தாழ்மை முறையையே அவர் பின்பற்றினார் தம்மைச் சூழ்ந்திருப்போருக்கும் அவற்றை அறிமுகப்படுத்தினார்.

பீற்றரோ துண்டுக் கடதாசிகளில் பென்சில் அடிக் கட்டைகளால் மதம் பற்றியும், ஒழுக்கம் பற்றியும் தன் சிந்தனையில் அலைமோதும் அரும் பெரும் கருத்துகளை குறித்து வைப்பார். தன் பரந்த வாசிப்பினூடாக 20ம் நூற்றாண்டின் சர்ச்சைகள், பிரச்சினைகட்கு அவர் அளிக்கும் சிறந்த மாற்று மருந்தாக அவை அமைந்திருந்தன எனினும் இக் கருத்துகளை நல்ல புத்தகக் கோவையாக எழுதி பாதுகாக்கக் கூடிய அளவுக்கு அவரது ஏழ்மை வாழ்வு இடங் கொடுக்கவில்லை.

யேசுவின் போதனைகட்கும் அவரைப் பின்பற்றுவோருக்குமிடையே இருக்க வேண்டிய வாழ்க்கை முறைத் தொகுப்பே பீற்றருக்கும் டொறத்திக்குமிடையே இருந்த ஒன்றிப்பாகும்.

1932ல் இறைஞானத்தின் திட்டங்கள் இவ்விருவரையும் சந்திக்க வைத்தன. இவ்விருவரும் 'கத்தோலிக்க தொழிலாளி' என்ற பத்திரிகையைத் தோற்றுவித்து, கத்தோலிக்க தொழிலாளர் இயக்கத்தின் மூலமாக, கத்தோலிக்க திருச்சபையை எவ்வளவு ஆழமாக மாற்ற உதவினார்கள் என்றால் அத் திருச்சபை இவர்களது பணியின் பயனாக முன்பிருந்த நிலையிலிருந்து வேறுபட்டதாகவே இருக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது.

கத்தோலிக்க தொழிலாளர் இயக்கத்துக்கு ஐந்தடுக்குமாடிக் கட்டடமொன்று கிடைத்தது. நியூயோர்க்கின் சீன நகரின் 115ம் இலக்கத்தில் அமைந்த இந்தக் கட்டிடம் இயக்கத்தின் தலைமை அலுவலமாக மட்டுமல்ல, ஆதரவற்றோரை வரவேற்கும் இல்லமாகவும் உபயோகிக்கப்பட்டது. தாங்கள் பிரயோசனமற்றவர்கள் எனக் கருதி சலிப்புடனும் நம்பிக்கையிழந்தும் — இவற்றால் செயலாக்கமின்றிச் சோம்பியிருந்தோர் அனைவரும் இந்த இல்லத்தைத் தேடி வந்தனர். நைந்துபோன ஆடைகளைகளையும் கிழிந்து போன காலணிகளைகளையும் அணிந்திருந்த அவர்களது முகங்கள் பசியினால் வெளுப்பேறியிருந்தன.

இவ்விதமே வாழ்க்கையின் அடிமட்டத்தில் பொருளாதாரப் பிரச்சினைகளால் உடலும் உளமும் நலிவுற்ற இத் துர்ப்பாக்கியசாலிகளை வரவேற்கும் இல்லமாக அத்தொடர் மாடிக்கட்டிடம் விளங்கியது. சூடான காப்பி, அப்பம், கஞ்சி போன்ற உணவுகள் பரிமாறப்படும் வரிசைகள் வளர்ந்து கொண்டேயிருந்தன. கணிசமான கடன் தொகைகள் வளர்ந்த பின்னரே நிதியுதவிகட்கான வேண்டுகோள்கள் நிதிகளைக் கொண்டு வந்து சேர்த்தன.

''இயேசுவை நீ மற்றவர்களிடம் காண வேண்டுமாயின் அவர்களை நீ அன்பு செய்ய வேண்டும். கடவுளது இரக்கத்தைப் பெறத் தெரியப்பட்டவர்களாகவும், அவருக்கு அருகில் இருப்பவர்களாகவும் உள்ள வறுமையில் உழல்வோர் மட்டிலும் ஏழைகளிலும் ஏழைகளாய் வாழ்வோர் மாட்டிலும் நாம் ஒருவித பெருமதிப்பை எம்முள் உணர்கிறோம் கிறிஸ்து மனிதரிடையே வாழ்ந்தார். கிறிஸ்துவின் மனிதாவதாரம் ஒரு மாபெரும் பரம இரகசியம். அது கடவுள் மனிதனானதை உணர்த்துகிறது. இத்தகைய மனிதாவதாரம் எம்முள் மகிழ்ச்சியை ஏற்படுத்தி முன்னொரு காலத்தில் கடவுளினால் மதிக்கப்பட்ட இவ்வுலகை முத்தமிடும்படி தூண்டுகிறது''

டொறத்தியின் இவ்வித ஊக்குவிப்பு வார்த்தைகளே தொழிலாளர் இயக்க தொண்டர்கள் உற்சாகத்துடன் ஏழைத் தொழிலாளிகட்கு துணை செய்யவும் ஆதரவற்றோர் அனாதைகட்காக வரவேற்பு இல்லங்களை பல துன்பங்கள் மத்தியில் நடத்தவும் தூண்டின.

வரவேற்பு இல்லங்களைத் தொடர்ந்து, பீற்றர் டொறத்தி குழுவினர் தொடங்கிய அரும் பெரும் பணி, விவசாயக் கூட்டுப் பண்ணையாகும். கத்தோலிக்க ஆயர்கள், தங்கள் மறைமாவட்டங்களில் விவசாய பொருளாதார கலாசாலைகளை அமைத்து ஏழை மக்களின் வாழ்க்கை முறைகளை வளம் படுத்துவார்கள் என்ற பீற்றரினது கள்ளங் கபடமற்ற எண்ணம் கைகூடவில்லை. எனவே டொறத்தியை அவர் தூண்டிக் கொண்டேயிருந்தார்,

ஸ்டேட்டன் ஐலண்டில் ஒரு ஏக்கர் தோட்டக் காணியுடன் முதலாவது விவசாயக் கூட்டுப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. ஈஸ்டன் மாகாணத்தில் கழித்து ஒதுக்கப்பட்டிருந்த 29 ஏக்கர் காணியே இரண்டாவது விவசாயப் பண்ணை. அறிவாற்றலும், ஆழ்ந்த அனுபவமும் நல்ல ஞானமும் வாய்ந்த பீற்றர் இப் பண்ணைகளிலேற்பட்ட எல்லாப் பிரச்சினைகளிலும் நல்லாலோசனையும் வழிகாட்டுதலும் வழங்கினார். எவரையாவது வரவேற்க, அவர்களது பிரச்சினை

(6ம் பக்கம் பார்க்க)

# யூபிலி கொண்டாடினோம்......?

கடந்த வருடம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் 50 வது ஆண்டு நினைவாஞ்சலி, யாழ். ஆயர் இல்லத்தில் ஆரம்பமாகி மறைமாவட்டமெங்கும் நல்ல முறையில் நினைவுகூரப்பட்டது. கண்காட்சிகள், கட்டுரை கவிதை வினாவிடைப் போட்டிகள் என நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

''பாவக் கழுவாய் நிறைவேற்றும் அந்நாளில் உங்கள் நாடெங்கும் எக்காளம் முழங்கச் செய்யுங்கள்''
லேவி 25.9

''ஐம்பதாவது ஆண்டு உங்களுக்கு யூபிலி ஆண்டு.''
லேவி 25:11,9

யூபிலிகள் விடுதலை தரும் அறிவிப்பு. ஆன்ம சுதந்திரத்திற்கும் அன்பின் பரிமாறலுக்கும் அழைப்பது. பாவக்கழுவாய் நிறைவேற்றும் அந்தநாளில் பல இடங்களிலும் எக்காளம் முழங்கச்செய்வது - கொண்டாட்டங்கள் நடத்துவது நீதியானதே ...... ஆனால்......

நல்லூர் சுவாமி ஆற்றிய அரும்பணிகளைத் தொடர எவரும் முன்வராதது வருந்தத்தக்கது. அவர் ஊக்குவித்த மறைபரப்புப்பணி குன்றிய நிலையில் உளது. அவர் உருவாக்கிய 37 கோவில்களில் பல சிதைந்த நிலையில் கிடப்பது தெரியவில்லையா? அவரது தமிழ் மொழி ஆராய்ச்சி, வரலாற்று ஆய்வுத்துறையில் அக்கறைகாட்ட, இம்மண்ணில் எஞ்சிநிற்கும் குருமணிகளோ, துறவுச்செல்வங்களோ; பொது நிலைக் கத்தோலிக்க புத்திஜீவிகளோ ஆர்வங்காட்டவில்லை.

''நிலத்தை அறுதியாய் விற்றுவிட வேண்டாம். ஏனெனில் நிலம் என்னுடையது. நீங்களோ என்னைப் பொறுத்தவரை அன்னியரும் இரவற்குடிகளுமே'' லேவி 25:23

என்ற யூபிலியின் உண்மை அறைகூவல் எவர்காதிலும் விழவில்லை. இரத்தம் தோய்ந்த இம்மண்ணின் அவல ஓலங்களிடையே அர்த்தமற்ற யூபிலிகளும் விழாக்களும் கொண்டாட்டங்களும் திண்டாட்டங்களுமே எஞ்சியுள்ளன.

இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினர் சிலர் முன்னாள் மறையாசிரியர் ராஜேந்திரத்துடன், கைவிடப்பட்டு கள்வர் குகையாக்கப்பட்டிருந்த (சுவாமி ஞானப்பிரகாசரினால் உண்டாக்கப்பட்ட) கோண்டாவில் புனித செபஸ்தியார் கோவிலைத் தரிசித்து, அதன் பரிதாப நிலையை அவதானித்தனர். ஒருவாரத்தின்பின் 30 பேர் கொண்ட குழுவாக அங்குசென்று பற்றைகளை வெட்டியும் குவிந்திருந்த கற்கள் மண்மேடுகளை அகற்றியும் சிறந்த சிரமதானப்பணி மூலம் ஆலயத்தையும் சூழலையும் அழகுபடுத்தினர். சிறு கூழ் பாடும் நடத்தினர்.

கடந்த பத்து வருடங்களாக கைவிடப்பட்ட நிலையிலிருந்த இக்கோவிலில் நித்திய விளக்கேற்றிவந்த சைவப்பெரியார் மிக்க மகிழ்வடைந்தார். முன்பு ஏழு அல்லது எட்டுக் குடும்பங்கள் இக்கோவிற்பங்கில் இருந்தனர். உரும்பிராய்க் கிறிஸ்தவர்கள் தங்கள் பெரிய சுவாமியின் நினைவாக வருடாவருடம் திருவிழாவுக்கு வந்து செல்வது வழக்கம்.

திரும்பவும் அத்திருத்தலத்தை முன்னைய நிலைக்கு கொண்டு வரும் முயற்சியில் பழைய பங்கு மக்களோடு தொடர்பு வைத்தும், மேய்ப்பர்களின் அசட்டையால் வேறு சபைகளுக்கு சிதறடிக்கப்பட்டோரைத் தேடிக் கொண்டுவரவும் பல்கலைக் கழக மாணவரோடு, புதிதாக நியமனம் பெற்ற ஆன்ம இயக்குநர் ஞானசேகரன் அடிகளும் ஆர்வம் காட்டிவருதல் பாராட்டத்தக்கது.

''ஐம்பதாம் ஆண்டைத் தூயதாக்கி, நாட்டில் வாழ்வோருக்கெல்லாம் தன்னுரிமை அறிவியுங்கள். அது உங்கள் யூபிலி ஆண்டு. அந்த ஆண்டில் நீங்கள் உங்கள் நிலப்பகுதிக்கும் உங்கள் இனத்தாரிடமும் திரும்ப வேண்டும்.''

(லேவி 25:10)

---

மக்கள்...
(5 ம் பக்க தொடர்)

களை பொறுமையுடன் கேட்க அவர்களது சிந்தனைகளை நேர்மையானவைகளாக மாற்ற அவர் தயங்கியதில்லை.

''கத்தோலிக்க தொழிலாளி'' இந்த நற்பணிகட்கு உந்து சக்தியாக விளங்கியது. அங்கு கடமையாற்றிய போல் ஹாலோ அடிகள் ஒரு சிந்தனையாளர், கத்தோலிக்க தொழிலாளியில் அவர் நற்செய்தியின் சாத்வீக கொள்கைகளை விளக்கி, கட்டுரைகள் வரைந்ததுடன் ஞான ஒடுக்கங்களையும் நடத்தினார். இவரைத் தொடர்ந்து பணியாற்றியவர் யோவண் கியூகோ அடிகள், இருவரும் நற்செய்தியை அடிப்படையாக வைத்து எச்சந்தர்ப்பத்திலும் யுத்தம் செய்வது தவறானது என்பதை வலியுறுத்தினர்.

போர் எதிர்ப்புக் கொள்கைக்கு முதலில் ஆதரவு வழங்கியவள் டொறத்தியே நற்செய்தியை உண்மையாகத் தான் உணர்ந்து கொள்ளத் தொடங்கியதாக அவள் கூறினாள், விவசாயப் பண்ணைகளிலும் வரவேற்பு இல்லங்களிலும் நற்செய்தியை அடிப்படையாகக் கொண்ட வாராந்த ஞான ஒடுக்கங்கள் நடத்தப்பட்டன, இது தங்கள் பணியின் பலத்தை அதிகரித்ததாக தொண்டர்கள் கருதினர்.

நியூயோர்க் துறைமுகத்தில் மாலுமிகளின் வேலை நிறுத்தம் ஒன்று வெடித்த போது ''கத்தோலிக்க தொழிலாளி'' ஒரு மத்திய நிலையத்தை அமைத்து ஆர்பாட்ட ஊர்வலங்களில் பங்குபற்றியோருக்கு உணவும் பானமும் அளித்தது மொட் வீதியின் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள வரவேற்பு இல்லங்களில் 50க்கு மேற்பட்ட மாலுமிகள் தங்கியிருந்தனர் மீண்டும் வேலை கிடைக்கும் வரை அவர்கள் அன்புடன் உபசரிக்கப்பட்டனர்.

இவ்வுலக வாழ்வில், அன்பின் ஆவியானவர் நம்முடையவர். பரிசுத்தப்படுத்தும் ஆவி இவரே. கல்வாரிப் பலியின் நேரடிப்பயனாக ஆவியானவர் நமக்கு அனுப்பப்படுகிறார். பரலோகம் நம் யாவருக்கும் திறக்கப்பட்டுள்ளது.

இரத்தக் கண்ணீர் வடிக்கும் மனித மனதுக்கு பரிசுத்த ஆவி ஆறுதளிக்கும் மருந்தாயிருக்கிறார். ஆன்மாவை மணம் வீசச்செய்யும் சுகந்தமாயிருக்கிறார் ஆழமான துயரங்களையும் வாழ்வின் கசப்பையும் மாற்றுகிறவராயிருக்கிறார்

Print "Annai printers", Jaffna
Published by PAX CHRISTI.
St JPSEPHS ASHRAM,
102, Main Street, Jaffna